ஞானசம்பந்தம்

மலர் 12] விஜய௵ ஐப்பசி௴ 10—11—53 [இதழ் 12

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை 20.

"மெய்கண்ட தெய்வம்
இத்தெய்வமல்லால் புவியில் வேறில்லை"

—குமரகுருபரர்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை 20.

ஆசிரியர்: நாகலிங்கத் தம்பிரான்.

தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில்

நவராத்திரி விழாச் சொற்பொழிவுகள்

திருக்கடவூர், வேளூர், சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு, திருபுவனம், பேரளம், திருக்கோளிலி உள்ளிட்ட தருமபுர ஆதீன தேவஸ்தானங்களில் நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆங்காங்கும் நவசக்திரூபமான லக்ஷார்ச்சனையும் நடைபெற்றது. அறிஞர்கள் பலர் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அதன் விபரம் வருமாறு:—

திருக்கடவூரில் 14—10—53ல் சென்னை வித்துவான் திரு. வை குஞ்சிதபாதம் பிள்ளை "அபிராமி அந்தாதி", 15—10—53ல் சிதம்பரம் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியபிள்ளை "அம்மையின் அருள்". **வேளூரில்** 13—10—53ல் சென்னை வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை "மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்", 14—10—53ல் வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் "சைவத்தின் இருகண்கள்". **சீகாழியில்** 13—10—53ல் திருவையாறு வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை "இறைவன் திருவுருவங்கள்", 14—10—53ல் காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேலு முதலியார் B.A., L.T., "அபிராமி அந்தாதி", 15—10—53ல் அண்ணாமலைநகர் வித்வான் திரு G. சுப்பிரமணியபிள்ளை M.A., B.L., "கடவுளைக் கண்டவர்". **திருப்பனந்தாளில்** 14—10—53ல் பாலகவி வயிநாகரம் திரு. வெ. இராமநாதன் செட்டியார் "பக்தி வலையிற் படுபவன் பரமன்", 15—10—53ல் திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A., L.T., "மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்". **திருவையாற்றில்** 15—10—53ல் பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் "ஐயாறதனிற் சைவனாகியும்". **திருபுவனத்தில்** 14—10—53ல் வித்வான் திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை "சக்தி வழிபாடு", 15—10—53ல் திருவிடைமருதூர் வித்துவான் திரு. M. நடராசதேசிகர் "உய்யும்வழி". **பேரளத்தில்** 14—10—53ல் திரு. வை. மு. சண்முக தேசிகர் "மும்மையால் உலகாண்ட முடிமன்னர்". **திருக்கோளிலியில்** 13—10—53ல் நாகை வித்துவான் திரு. வை. மு சண்முக தேசிகர் "விளக்கிட்ட விழுத்தொண்டர்".

உ

குருபாதம்

599

ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஹு ஐப்பசிமீ 10—11—53. [இதழ் 12

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

அர்ச்சனையும் ஆராதனையும்

ஆலயங்களில் ஆண்டவனுக்கு அழகான வடிவங்களை அமைக்கிறோம். அன்போடு வழிபடவருகின்ற மக்கள் அதனிடமிருந்து அருளையும், பொருளையும், தெருளையும் எதிர்பார்க்கிறார்கள். இறைவன் திருவுருவம் கல்லாலும் செம்பாலும் ஆக்கப்பெற்றிருந்தால்மட்டும் போதுமா? சிற்பியின் சிந்தனை செதுக்குதல் வாயிலாகக் கலையின் உறைவிடமாகமட்டும் இருந்தால் போதுமா? அழகான சிற்பங்கள் எத்தனையோ சுவர்களிலும் தேர்களிலும் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் தெய்வசாந்நித்தியம் வந்துவிடுகிறதா? இல்லை. ஆலயங்களில் அமைக்கப்பெற்ற திருவுருவங்களில் இறைவனை மந்திரஸ்வரூபியாக ஆவாஹனம் செய்கிறார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு

மந்திரம் செறிகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு திருவுருவினிட மாகத் திருவருட் பிரகாசம் உண்டாகிறது. அதற்காகவே லக்ஷார்ச்சனைகளும், ஆராதனைகளும் விசேஷமாக எங்கும் நடைபெறுகின்றன.

எங்கும் நிறைந்தவனுக்கு - எல்லாம்வல்ல சர்வேஸ்வரனுக்குச் சக்தி உண்டாக்கவா இந்த அர்ச்சனைகளும் ஆராதனைகளும் என்று இலேசாக எண்ணிவிடுகிறார்கள். நம்மால் சக்தி உண்டாக்கக்கூடிய அளவுக்கு இறைவன் எளியவனல்ல. அப்படி நம்மால் உண்டாக்கப்பட்ட சக்தி நம்மனைவர்க்கும் எவ்வளவு பெரும்பயனைக் கொடுத்துவிடமுடியும்? ஆதலால் எங்கும் நிறைந்த சர்வேஸ்வரனுடைய திருவருட்பொலிவை நம்மால் அமைக்கப்படும் திருவுருவங்களின் வாயிலாக வெளிப்படச் செய்ய, இந்த மந்திர உச்சாடனம் இன்றியமையாததாகிறது. பசுவின் மடியில் பால் நிறைந்திருந்தாலும் காம்பின் வழியாகக் கறக்கக் கன்றை முட்ட விடுதலும், கையாலுருவுதலுமாகிய முயற்சிகள் தேவைப்படுகின்றன அல்லவா? அதுபோல் திருவருட்சக்தியை, திருவுருவவாயிலாக வெளிப்படுத்துதலே அபிஷேக ஆராதனைகளின்நோக்கம் என்பதைத் தெளிதல்வேண்டும்.

தவமுனிவர்கள் வாழ்வு உலகத்திற்காகவே. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் என்பது அவர்களுக்கே சிறந்த பெயர். அவர்கள் செய்யும் அர்ச்சனை ஆராதனைகள் யாவும் நிஷ்காமிய கர்மாக்களே. அவற்றால் விளையும்பயன் அகில உலகத்துக்குமே. இன்றைக்கு வறண்ட வானம் பெய்வதும், வளம் தழைப்பதும், வறுமை நீங்குவதும், வயிற்றுப்பசி தணிவதும் ஆகிய எல்லாம் அவர்கள் செய்யும் பூஜைமுதலியவற்றின் பலன்களே. இவைகளைக் கொண்டு அர்ச்சனை ஆராதனைகள், நாம்காணும் திருவுருவின் வாயிலாகக் கடவுட் சக்தியை வெளிப்படுத்துவன என்றும், முனிவர்களால் செய்யப்படும் இந்த நல்லறங்கள் நிஷ்காமிய அறங்களே என்றும், அவைகளின் பயன் உலகத்தில் உள்ள சராசரங்கள் அனைத்தையுமே சாரும் என்றும் மனங்கொள்ளுதல் வேண்டும்.

601

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்

திறப்புரை

மாயூரத்தில் நடைபெற்ற சுதேசிக் கலை - கைத்தொழில் பொருட்காட்சியை 1—11—1953 ஞாயிறன்று திறந்தருளியபோது நிகழ்த்தியது.

பேரன்பர்களே!

உலகத்திலே எவ்வளவோ பிறவிகளை நாம் பார்க்கிறோம். நடப்பன பறப்பன கிடப்பன இப்படி எவ்வளவோ உள்ளன. இப்படியுள்ள அப்பிறவிவகைகளை எண்ணிச் சொல்லியிருக்கிறார்கள் நம் பெரியோர்கள். பாருங்கள்! எண்பத்துநான்கு லக்ஷம் என்று. அவைகளில் ஒன்றுதானே மனிதப்பிறவி. பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனுக்கும் அன்புவேண்டும். அன்பு வேறு; ஆசை வேறு; நம் கண்ணுக்குக் காணப்படுகின்ற பொருள்களெல்லாம் அழிந்தொழிவனவே. அவைகளிடத்துச் செலுத்தப்படுவதுதான் ஆசை எனப்படும். இது அன்பாகாது. இப்படியெல்லாம் நம்மைப் படைத்து, அநுபவப்பொருள்களையும் ஆக்கித்தந்த அந்த கருணாமூர்த்தியாகிய பகவானிடத்துச் செலுத்தப்படுவதுதான் அன்பு. புல்லாகி, பூடாகிப், புழுவாகி, மரமாகி, மிருகமாகிப், பறவையாகி, பாம்பாகி, கல்லாகி இப்படியெல்லாம் தோன்றித் துன்பத்துக்கு ஆளாகி மனிதப்பிறவியெடுத்த ஒருவன் மேல்நோக்கிப் போகவேண்டும்; ஆத்மலாபத்தை அடையவேண்டும். இது தானே அவன் செய்யவேண்டுவது! அப்படியின்றி 'நான் திரும்பித்தான் போவேன்; எனக்கு இன்பம் வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டே இருளிருக்கும் இடம் தேடிச் செல்வானானால் அவனைச் சிறப்புடையவன் என்று சொல்லலாமா? ஆகவே ஒவ்வொருவரும் உண்மையை உணரவேண்டும். உலகத்தையெல்லாம் – நம்மையெல்லாம் படைத்த கடவுள் உண்டு; அவனை வழிபடவேண்டும் என்ற எண்ணங் கொள்ளவேண்டும்.

602

சிலர் நினைக்கலாம்! நம் அறிவைக்கொண்டு எல்லாவற்றையும் பெற்றுவிட முடியாதா? கடவுள்தானு கொடுக்க வேண்டும் என்று. இதோ பாருங்கள்! மின்சார விளக்கு எரிகின்றது. இது மக்கள் கண்டுபிடித்ததுதான். ஆனுல் வேலைநடந்துகொண்டிருக்கும்பொழுது இடையூறு இல்லாதபடி எரிகின்றதே அதுதான் ஆண்டவன் நியதி. 'அவனன்றி ஓரணுவும் அசையாது'.

தருமபுரம் மாயூரநகரின் கீழவாசல் என்று சொல்லலாம். அங்கிருந்து வந்திருக்கின்றேன். காரணம் என்ன? உங்கள் அன்புதான்; அதுதான் இழுத்து வந்திருக்கின்றது. கூட்டம் நடக்கிறது. இது மழைகாலம் அல்லவா? இப்பொழுது மழை பெய்துகொண்டிருந்தால் விழா சிறக்குமா? மழை பெய்யாமலிருந்து விழாவும் சிறப்பாக நடக்கிறது என்ருல் ஆண்டவன் கருணைதான் இது என்று சொல்ல என்ன சந்தேகம்? வருணபகவான் கருணைகாட்டுகிருர் என்றுதானே அர்த்தம். சென்றவருஷமெல்லாம் மழைவேண்டும்; மழை வேண்டும் என்று விரும்பி வருணபகவானை வரவேற்ற மக்கள் போதும் போதும் என்று இப்பொழுது சொல்கின்ருர்கள். உலகம் அருட்சத்தியின் வடிவம்; வானம் அவளுடைய கண்கள்; பெருகிவருகின்ற நீர் வயல்வளம் பெருக்கும் மழை. இது ஒரு சிறந்த தத்துவம். எல்லார்க்கும் பெய்யும் மழை. ஆண்டவன் ஏழைபங்காளன். அவன் சந்நிதியில் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு ஏது?

மழைவேண்டும் என்ருல் அரசர்கள் அந்தகாலத்திலே அந்தணர்களை அழைத்து யாகம்செய்யச்செய்தார்கள். யாகப் பயனுல் மழை பொழியும். சமீபத்தில் மைசூர் போயிருந்தேன். சிருங்கேரி மடத்தில் சண்டிஹோமம் செய்தார்களாம் மழைக்காக. யாகம் செய்கின்ருர்களே; லக்ஷார்ச்சனைகள் செய்கின்ருர்களே இதனுல் என்னபயன்? செய்யும் அந்தணர்களுக்கு—செய்விக்கின்ற கர்த்தாவுக்கு—அல்லது கடவுட்குத்தான் நன்மையா? என்றெல்லாம் எண்ணம் எழுவது இயற்கை. யாகஞ்செய்தால்—அர்ச்சனைசெய்தால் மழை பெய்கிறது.

காவிரியில் வெள்ளம்வருகிறது. வெள்ளம் வயலில் பாய்கிறது. நீர் உயர வரப்பு உயரும்; வரப்புயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயர அரசு உயரும். இப்படிக் குடி உயர்ந்தால் நன்மை யாருக்கு என்பதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.

ஐப்பசி மாதம் இத்தலத்திற்குச் சிறந்த மாதம். இந்த மாதத்தில் கொடி ஏறிவிட்டால் மழை பெய்துகொண்டேயிருக்கும். மழையையும் பொருட்படுத்தாது மக்கள் நாடோறும் விடியற்காலையில் நீராடுகின்றார்கள். அவர்கள் தம்மை அறியாமலேயே பகவந்நாமத்தை உச்சரிக்கின்றார்கள். பகவந்நாமத்தில் 'சிவ சிவா' என்று சொல்வதா? 'ராமா ராமா' என்று சொல்வதா? என்ற சர்ச்சை தேவையில்லை. அவரவர்களும் அவரவர்கட்குரிய பகவந்நாமங்களை உச்சரிக்கலாம். அதில் சச்சரவு வேண்டாம். சைவத்தில் ஒரு பாட்டு; பழம் பாட்டு. ஔவையார் பாடியது. நீங்கள் ஔவையார் படம் பார்க்கிறீர்கள். விநாயகரில் தொடங்கி முருகனிடத்தில் சென்று கயிலையை அடைகிறது. அந்த ஔவையார் சொன்ன உபாயம் என்ன? "சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை; இதுவே உபாயம்.' எவ்வளவு எளிய பாட்டு; உயர்ந்த கருத்து.

இப்பொழுது நமது அன்பர் மருதவாணம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள். ஒரு சமயவாதி பொருட்காட்சி சாலையைத் திறந்துவைக்கிறார்; ஒரு அரசியல்வாதி தலைமை தாங்குகிறார் என்று. அப்படியானால் அரசியல்வேறா? சமயம் வேறா? சிந்தியுங்கள்! அரசியலின்றிச் சமயம் பிரிந்திருக்குமா? இருக்காது. மலரும் மணமும்போல் இரண்டும் இணைந்தேயிருக்கும். பொது அறிவின் வளர்ச்சி கடவுள் நம்பிக்கையைக் கெடுத்துவிடும். அதனை அப்படி விட்டுவிடக் கூடாது. கடவுள்நெறி மாறாட்டத்தால் தீமைகள் வரும்' சமயமும் சமுதாயமும் ஒன்றுபட்டது. மனிதன் மனிதனாக வாழ — வாழ்க்கையில் மேம்பட தெய்வ நம்பிக்கைவேண்டும்.

604

மூவேந்தர்கள் ஆண்ட நாடு நமது நாடு. அதில் சேர வம்சத்தில் தோன்றியவர் சேரமான்பெருமாள் என்ற அரசர். அவர் செய்த சிவத்தொண்டுகள் அளவில்லாதன. உவர்மண் நனைந்து கரைந்து உடம்பின்மீது பரவிக் காய்ந்த தால் ஒரே வெள்ளையாகக் காட்சியளித்த வண்ணானைக் கண்ட வுடனே சிவனடியார் என்று வணங்கினாராம். அவர் எண்ணம் எப்படி இருக்கும்? நமக்கெல்லாம் உள்ளம் வெள்ளை; பூசிக்கொள்ளும் பொடியும் வெள்ளை; விரும்பப் படுகின்ற ஆடையும் வெள்ளை. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை என்பது பழமொழியல்லவா? மற்றொருசாராரைப் பார்த்திருப்பீர்கள்! அவர்கள் உள்ளமும் கருமை; அணிந்து கொள்ளும் உடையும் கருமை; அவர்கள் சுவரில் எழுதுகின்ற எழுத்தும் கருமை; எழுதும் நேரமோ இருட்காலம். இப்படி அவர்கள்போக்கு. அவர்கள் விக்கிரகம் ஏன்? என்பார்கள். மண்ணாயிருந்தால் என்ன? உலோகமாயிருந்தால் என்ன? உருவமென்று நினைத்தால் மண் மறைகிறது; உலோகம் மறை கிறது. மண்ணென்றால் – உலோகமென்றால் உருவம் மறை கிறது. மரத்தை மறைத்தது மாமதயானை; மரத்தில் மறைந் தது மாமதயானை. உருவவழிபாடு நமக்கெல்லாம் அவசியம். அப்பொழுதுதான் மனம் லயிக்கும். வேண்டாம் என்கின்ற கூட்டத்தவர்களுங்கூட அதை மண்ணென்று கருதுகிறார்கள்! இல்லை. அவர்களும் இது விநாயகர்; இது கிருஷ்ணன் என்று தானே எண்ணி அழிக்கமுற்படுகிறார்கள். ஆகவே அவர்களும் நம்வழிக்கு வருகிறார்களல்லவா?

எம்மதமும் சம்மதமே என்பதுபோல் அவரவர்களும் அவரவர்கள் மதத்தை அநுட்டிக்கவேண்டும்; அதில் பிறர் தலையிட்டு மதமாற்றஞ்செய்யக்கூடாது. அதற்கு அரசாங்கக் கண்காணிப்பு வேண்டும். அரசாங்கம் மதச்சார்பற்றது என்றால் அதுதான் அர்த்தம்.

நமது ராஜாஜி அவர்கள் கடவுள்பக்தி நிறைந்தவர்; கடவுள் கருணையினால்தான் உலகம் நடக்கின்றது என்று எண்ணும் தீர்க்கதரிசி; அவர் தமிழ்த்தாயின் தவப்புதல்வர்; அவர் மாகாண முதலமைச்சராக இன்று இருப்பது

தமிழர்களுக்கெல்லாம் ஒரு தனிச்சிறப்பு அளிக்கின்றது. அவர் உலகத்தில் சிறப்புடையவர். அவர் அரசியல் சமயத் திற்குப் புறம்பானதன்று. உலகம் சுபிக்ஷம் அடைய யாவரும் பிரார்த்தனை செய்யவேண்டும்; பிரார்த்தனைக்கு உகந்த பெருமானின் கருணையினால் மழை பெய்யும்; பயிர் விளையும்; பஞ்சம் நீங்கும் என்றெல்லாம் அறிவுறுத்துகின்றார். அது மட்டுமா? 'கோயில்களைக் கலைக்கூடம் என்றுமட்டும் எண்ணி விடாதீர்கள்' ஆண்டவன் இருக்கும் இடம் அது என்று எண்ணிக்கொள்ளுங்கள்; என்று ஒவ்வொரு பிரசங்கத்திலும் சொல்லிவருகிறார்.

ஆயிரமானாலும் மாயூரம் ஆகாது என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அத்தகைய சிறப்புள்ள இந்த ஊரிலே இன்றைக்குக் காட்சிச்சாலை தொடங்குகிறது. இன் றைக்கு ஞாயிற்றுக்கிழமை. சூரியனுக்கு உரியநாள். பானு வாரம். சூரிய ஒளியில்லாமல் உயிர்கள் வாழமுடியுமா? ஒரு சிலரைப்போல நாம் இருளையே விரும்பிக்கொண்டிருப்போமா! அவர்களுக்குக் கருமையில் விருப்பம். நாம் அப்படியல்ல. நமக்கு ஒளிதான் தேவை. சோதியே சுடரே! சூழ் ஒளி விளக்கே! என்றெல்லாம் திருமுறை ஆண்டவனைக் கூப்பிடு கிறது. இந்த ஐப்பசிமாதம் இத்தலத்திற்குச் சிறந்தமாதம். திருவிழா நடைபெறும்மாதம். அடுத்த கார்த்திகை சோம வார விசேஷம். மார்கழியில் எங்குபார்த்தாலும் திருவெம் பாவை மாநாடு. இது தலத்தின் தனிச்சிறப்பு.

பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்பது திருக்குறள். ஆகவே ஒவ்வொருவரும் பொருள் சம்பாதிக்க முற்படுகிறார் கள். பொருள் வேண்டியதுதான். நல்லமுறையில் அதனைப் பெறவேண்டும். தீயவழியில் சம்பாதித்த பொருள்களெல்லாம் தீயவழியிலேதான் செலவழியும். நல்லவழியில் சம்பாதிப் பானேயானால் அந்தபொருள் நல்ல காரியங்கட்குத்தான் பயன் படும். கொஞ்சமும் வீண்போகாது. அதுபோல் காவிரியைப் பாருங்கள். கங்கைகூடத் தன் பாபத்தைப் போக்குவதற்கு இந்த மாதத்தில் இங்குவந்து காவிரியில் நீராடுகின்றாள். அந்த சிறப்பு நம் காவிரிக்கு உண்டு. காவிரிநீர் நல்லோர் பொருளைப்

606

போல, சிறிதுகூட வீணாவது இல்லை. கடைசிவரையில் நீர் முழுவதையும் வயல்களுக்கே பயன்படுத்துகின்றது. வயல் களுக்குப் பயன்பட்டால் அது பிறகு நமக்குத்தானே பயன். 'சோழநாடு சோறுடைத்து' என்ற பாட்டு எவ்வளவு பொருத்தம். இவ்வாறு காவிரி மக்களுக்குத் தன் பயனைக் கொடுக்கிறது. இதன் நீர் கடலுக்கே செல்வதில்லை. பரமேஸ் வரனுக்கு, முன்பு தன்னிடத்தில் விஷத்தை உண்டாக்கிக் கடல் கொடுக்கவில்லையா? அதனால் காவிரிக்குக் கடலிடத்துக் கோபமாம். கடலை எட்டிப் பார்ப்பதுகூட இல்லையாம். 'கடல் வயிறு நிறையாத காவிரி' என்கிறார் சேக்கிழார்.

இவ்வாறு காவிரிச்சிறப்பும் விழாச்சிறப்பும் உள்ள இந்தத் தலத்தில் உங்களுடைய அன்பின்பெருக்கால் பொருட் காட்சிசாலை அமைந்திருக்கிறது. பல நாள் எண்ணி எண்ணி இப்பொழுது உருவாகியிருக்கின்றது. ஆனால் இதை நல்ல முறையில் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பொருட் காட்சி வெறுங் கலைக்காட்சியாகமட்டும் இருத்தல் கூடாது; வெறும் விளம்பர ஸ்தாபனங்களாக ஆகிவிடக் கூடாது. அறிவிற்கு விருந்தாகவும், தொழிலுக்குத் துணையாகவும் இருக்கவேண்டும். கலைக்காட்சி கடவுட் காட்சியாக மாற வேண்டும்; கலைக்காட்சிதான் கடவுட்காட்சியின் அடிப்படை. அவ்வாறு காணுகின்றபோது பொருளைப்பற்றிய கவலையே நமக்கு இருக்காது. ஆத்மலாபந்தான் கிட்டும். அதுபோதுமே. ஆகவே நீங்கள் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஆத்ம புராணத்தைப் பேசிக்கொண்டேபோனால் காலங் கடந்துவிடும். இன்றைய ஞாயிறு எங்கும் விடுமுறைதானே என்று நினைக்கலாம் ஆனாலும் பல நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டுமல்லவா? ஆகவே இதோடு திறப்புரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

இந்தக் கலைக்காட்சிக் கமிட்டித் தலைவர், உறுப்பினர், மற்றுமுள்ள அன்பர் அனைவர்க்கும் ஆலவாயண்ணல் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் எல்லாநலன்களும் நிறைவதாக.

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்

மாயூரத்தில் பொருட்காட்சியைத் திறந்தருளியபோது

பொருட்காட்சிக் கமிட்டியினர் அளித்த

வரவேற்புரை

தருமையாதீனத் தவமணியே வருக! வருக!

மாயூர மணிவிளக்காம் மாண்புடைய தங்கள் வருகை நல் வருகையேயாகுக! ஞானச்சுடர்க் கொழுந்தாய நும்மை, திரிகரண சுத்தியோடு வரவேற்கின்றோம்.

ஆசு இலா ஞான தேசிக!

துறவறம் நின்று துன்னிருள் அகற்றும் தூய்மையாம் நின்றன் பதமலர் பற்றும் பான்மையே பதம் தரும் எனக் கண்டனம்.

ஆகமம் பேணும் அன்புடைப் பெரியோய்!

ஆரியம் தமிழ் எனும் ஆயிரு மொழியையும் அரியதாம் நின் திருக்கண்களெனக் கொண்டு ஆதரிக்கும் ஆண்மையை யாரே அளக்கவல்லார்.

சமயப் பணி பூண்ட சற்குருவே!

சமயமே தமிழகத்தின் தனி உயிர் எனவோர்ந்து சமயப் பிரசாரம் செய்யச் செய்துவரும் எங்குலக் குருவாம் தங்கள் பணி தமிழகத்தின் ஜீவப்பணி என்பது மிகையாமோ?

ஒருவனே தேவன் எனக்கண்ட உத்தம!

அன்பும் சிவமும் இரண்டென்ற அறிவிலார்க்கு அன்பே சிவம் எனக் கூறி ஆலயப் பணிகொண்ட நின் ஆன்மநேயப் பெருங்கருணைதான் என்னே!

608

கல்வி நலங்கண்ட கண்மணியே!

கல்வியிலும் தொழிற்கல்வி சிறந்ததெனவோர்ந்து அக் கல்விக்கே உறுதுணையாய் நிற்கும் இக்கைத்தொழிற் பொருட் காட்சியைத் திறந்துவைக்க நும்மினும் மிக்கார் உளராவர் கொல்!

வேண்டியது அளிக்கும் வித்தக!

எம் வேண்டுகோட் கிணங்கி இவண்போந்து இப்பொருட் காட்சியைத் திறந்துவைத்து அருள்பாலித்த நுமக்கு, கல்லாலின் புடையமர்ந்த கருணைப் பெருங் கடல் கடைக்கண் நல்குமாறு இறைஞ்சுவதே யாம் செய்யும் தொண்டாம், அருட்பெருங் கடலாய தாங்கள் கன்னித் தமிழ் வளர்த்து, பொன்னி மண லினும் பலவாக நிறைந்த செல்வத்தோடு நீடு வாழ இறைவனை வழுத்துகின்றோம்.

நம்பந்தம் தானறவே நற்றமிழைச் சொல்ஞான
சம்பந்தன் தாளே சரண்.

ஷ பொருட்காட்சித் திறப்பு விழாவில்
மாயூரம் நகராட்சி அலுவலகத்தார் அளித்த
வாழ்த்தின்னுரை

அருட்பெருஞ் சைவத் தனிப்பெருந் தலைவராம்
சுப்பிரமணிய ஞானசம்பந்த!

மனித உள்ளம் ஒரு பண்படாத காடு. அக்காட்டை நினைக்கும்போது கோபம் என்ற புலி, கடுஞ்சொல் என்ற கருநாகம், களவு என்ற கட்டுவிரியன், குறளை என்ற குள்ளநரி இவற்றிற்கிடையே வாழுவகையறியாமல் அன்பு, அருள், ஈகை, இரக்கம் என்கின்ற கலைமான்கள் இவை நினைவுக்கு வரும். உள்ளக் காட்டைப் பண்படுத்துவது என்பது எல்லோர்க்கும் எளிதன்று. ஞானவாள் ஏந்திய வீரர்கள் தான் உள்ளக் காட்டைப் பண்படுத்தி, உறுதி என்ற கலப்பையால் உழுது, அருள் வித்திட்டு, கருணைநீர் பாய்ச்சி, சிவம் என்னும் விளைவைக்

காணும் சிறப்புடையர். இக்கருத்தோவியத்தைக் கவினுற ஆக்கித்தந்த ஸ்ரீ குமரகுருபர அடிகளாரை ஞானவீரராக்கிய ஆசிலா வண்புகழ் மாசிலாமணியின் மரபில்வந்த முனிவர் சிகாமணியே வருக! வருக!!

பொன்னவிர் கடுக்கைப் புரிசடைப் புங்கவன்
இன்னருங் கோயில் எழிலுறக் காண்போய்!

இந்திய நாட்டின் இணையிலாப் புகழ்பெறு தஞ்சை மாவட்டம் தனிலுறை கோயில்கள் முடியுடை வேந்தர் மூவரும், முடியுற வணங்கவும், முறையான ஆட்சி புரியவும், தமிழும் சைவமும் தழைத்தினிதோங்கவும் பண்டைக்கலைகள் பண்புடன் பொலியவும், அழகுற, அணியுற அமைக்கப்பட்டவை என்பதை யாவரும் அறிவர். அக்கலைக் கோயில்களுள் இருபத்தேழு தங்கள் அருளாட்சியில் எழிலுறப் பேணிப் புரக்கப்படுகின்றன என்பதை எண்ணும்போது மகிழ்ச்சி பொங்குகிறது. இக்கோயில்கள் ஆண்டவன் அருளை அடையும்வழியை அனைவருக்கும் உணர்த்தும் அருள் நிலையங்களாகவும், பழந்தமிழர் கலைகளைப் பல்லோர்க்கும் அறிவிக்கும் பல்கலைக் கழகங்களாகவும் தங்கள் அருளாட்சியில் திகழ்வது போற்றற்குரியது.

கண்ணுதற் கடவுள் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்த பசுந்தமிழ் வளர்ப்போய்!

மறைக் கதவினைத் திறந்ததும், முதலை உண்ட பாலனை வரவழைத்ததும், தமிழ். எலும்பைப் பெண்ணாகச் செய்ததும், கடலிலே கல்மிதக்கக் கண்டதும் தமிழ். இச்சீரிய அருளுடைச் செந்தமிழ், முடியுடை மன்னரின் மடியிலே வளர்ந்ததுபோன்று, தங்கள் அன்பிலே தமிழ்க் கல்லூரியாகவும், தேவார பாடசாலையாகவும், உயர்தர ஆரம்பப் பாடசாலையாகவும் வளர்ந்தோங்கி வருவதை வாயாரப் புகழ்கின்றோம். அத்தமிழே சம்பந்த சஞ்சிகையாகவும், சாத்திர தோத்திர நூல்களாகவும் அழகுறத் தமிழ் நாட்டில் அணிவகுத்து வருவதைக்கண்டு மகிழ்கிறோம். வடமொழியுந் தென்தமிழும் இரட்டைக் குழந்தைகள் என்று எண்ணுமாறு தாங்கள் வடமொழிக் கல்லூரியையும் ஆகம பாடசாலையையும் அமைத்தருளியது பெருமைக்குரியதே. சமய நூல்களைச் சமயமறிந்து வெளியிட்டும், ஆலயங்களில் ஆத்திகப்

610

பிரசாரங்களை அமைத்தும், தமிழகத்தின் தலைநகரில் பிரசார நிலையம் நிறுவியும் செய்யும் தங்கள் தமிழ்ப்பணி வளர்ச்சி யடையுமாறு வாழ்த்துகின்றோம்.

கைம்மாறில்லாக் கணக்கில் கவினுடைப்
பொதுநலத் தொண்டுசெய் புண்ணிய சீல!

சைவமும் தமிழும் தழைத்தோங்க அமைக்கப்பட்ட தங்கள் ஆதீனம் பொதுநலத் தொண்டுகளிலும் ஈடுபட்டு மருத்துவ நிலையங்களாகவும், கல்வி நிலையங்களாகவும், அனாதை விடுதிக ளாகவும், பயன்படுவதை எண்ணும்போது தங்கள் பொதுநலப் பணியின் உயர்வு புலப்படுகிறது. இத்துடனமையாது புத்தக நிலையங்கள் அமைத்து அறிவுப்பணி ஆற்றுவதும், அகதிகள் நிவாரண அருங்கொடை அளிப்பதும், தாழ்த்தப்பட்டோர் ஏற்றமுற ஆதரவுநிதி அளிப்பதும் தங்கள் அருள்தொண்டுகள் என்பதை அவ்வப்பொழுது அறிந்து போற்றுகின்றோம். இவ் வாறு பல்லாற்றானும், மக்களுக்குப் பயனுறு தொண்டுகள் பலவும் தாங்கள் புரிய, தங்கள் அருளாட்சி தழைத்தோங்க எல்லாம் வல்ல சித்தராம் சொக்கலிங்கப் பெருமான் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

திருக்கடவூர் ஆலயத்தில்.....

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா:

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் முறையாக, பாடல்பெற்ற க்ஷேத்திரங்களில் அபிஷேக ஆராதனை செய்வித்துத் தலப் பதிகத்தையும் அச்சிடுவித்து ஆங்காங்கு வழங்கப்பெற்று வருகிறதை அன்பர்கள் அறிவர். ஆண்டு ஜன்மநக்ஷத்திர விழா வழக்கம்போல் இவ்வாண்டும் 4—11—53 புதன்கிழமை திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும், ஓமங்களும் நடைபெற்றன. ஸ்ரீ அபிராமியம்மைக்குச் சந்தனக் காப்பு அலங்காரமும், நவசக்தி அருச்சனை ஆகியவைகளும் நடந்தன. ஏராளமான அன்பர்கள் வந்து தரிசனம் செய்தார்கள். வழக்கம்போல் திருக்கலயநல்லூர் சிவாலயத்திலும் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து ,திருப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது

விழா மலர்:

தருமபுர ஆதீனத்தைச் சார்ந்தவைகளுள் திருச்சி மௌனமடமும் ஒன்று. திருச்சிராப்பள்ளித் திருத்தலம் சம்பந்தசுவாமிகளாலும், அப்பர் சுவாமிகளாலும் பாடப் பெற்றது. அப்பெருமான்மீது பாடப்பட்ட பிரபந்தங்களுள் "சிராமலை அந்தாதி"யும் ஒன்று. இந்நூல் இதுகாறும் வெளிவந்ததில்லை. மேற்படி கோயில் குடவறையில் நூல் முழுதும் கல்லெழுத்திலுள்ளது. கல்வெட்டிலாகாப்பிரிவினர் அப்படியே வெளிப்படுத்தியுள்ளனர். அதனை யாவரும் தெரிந்துணரும்வகையில் இராமநாதபுரம் சேது சமஸ்தான வித்துவான் ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்களைக்கொண்டு பரிசோதித்து, பொழிப்பு குறிப்புரை எழுதுவித்து, ஆதீன வெளியீடாக—விழாமலராக அச்சிட்டு அன்பர்கட்கு வழங்கப் பெற்றது.

612

திருமுறை மாநாடு:

ஜன்மநக்ஷத்திர விழாவை ஒட்டி திருமுறை மாநாடு நடைபெற்றது. அன்றுகாலை 7-30 மணிக்கெல்லாம் சமயாசாரிய சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன, திருமுறைகளுக்கு அலங்காரஞ் செய்யப்பெற்று, ஆராதனை நடத்தி, அங்கிருந்து பிரசார மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்து கொண்டுவரப்பட்டது. அங்கும் ஆராதனை. தேவஸ்தான தேவாரவகுப்பு மாணவிகள் திருமுறை ஓதினுர்கள் மணி 8-30 ஆயிற்று திருமுறைப்பாராயணத்தோடு மாநாட்டு நிகழ்ச்சி தொடங்கிற்று. ஆதீனப் பிரசாரகோஷ்டித் தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் தலைமை வகித்து, ஞானசம்பந்தர் திருமுறைப் பெருமையை விளக்கிப் பேசி, மாநாட்டு நிகழ்ச்சியைத்தொடங்கிவைத்தார்கள். பிறகு முறையே கீழ்க்காணுமாறு திருமுறைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

திருப்பனந்தாள் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் "அப்பர் திருமுறை", திருநள்ளாறு தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "சுந்தரர் திருமுறை", திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் "திருவாசகம்", தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழாசிரியர்கள் வித்துவான் திரு. வி. சா. குருசாமி "திருக்கோவையார்", வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் "திருவிசைப்பா", வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர் "திருப்பல்லாண்டு", தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் புலவர் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் "பத்தாந்திருமுறை", தருமபுர ஆதீனப் பாடசாலைத் தேவார ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் "பதினெராந்திருமுறை", தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் "பெரியபுராணம்".

மாலை யானைமீது திருமுறை ஊர்வலம் 4-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. நகர்வலமாக வந்து ஆலயத்தையடைய சுமார் இரண்டுமணிநேரமாயிற்று. ஆதீனப் பாடசாலைத் தேவார ஆசிரியர், மாணவர்கள், ஆதீன இதர தேவஸ்தான தேவார வகுப்பு ஆசிரியர்கள், திருக்கடவூர் தேவஸ்தான தேவாரவகுப்பு ஆசிரியர், மாணவிகள் ஆகியோர்கள் தக்க இன்னிசைக் கருவிகளுடன் பன்னிருதிருமுறைகளையும் ஓதி இன்புறுத்தினர்கள்.

தேவார வகுப்பு ஆண்டுவிழா

மாலை மணி 6. பிரசார மண்டபத்தில் அன்பர்கள் கூடியிருந்தனர். விழாத்தலைவர் சென்னை அரசாங்க ரெவின்யூ மந்திரி **கனம் ஸ்ரீ M. A. மாணிக்கவேல் நாயகர்** அவர்கள், சந்நிதியிலிருந்தே திருமுறை ஊர்வலத்தில் கலந்துகொண்டு இன்னிசைப் பாக்களைக் கேட்டுக்கொண்டே வந்தார்கள். திருக்கோபுர வாயிலை அடைந்ததும் மாலை சூட்டி, பிரசாதம் கொடுத்து மரியாதை செய்யப்பட்டது. உள்ளே சென்றதும் திருமுறைக்குத் தீபாராதனை நடந்தது. பிரசாரமண்டபத்தில் திருமுறைகளை எழுந்தருளச் செய்துவைக்கப் பெற்றது. விழா தொடங்கிற்று.

தேவஸ்தானத் தேவாரவகுப்பு ஆசிரியர், திரு. சாமிஐயா தேசிகர் அவர்கள் 'பெரும் புலர்காலை மூழ்கி' என்ற திருப்பாடலைச் சொல்லி அனைவரையும் அமுதகடேசப்பெருமான் திருவருளில் திளைக்கச் செய்தார்கள்.

பிறகு **ஸ்ரீ லஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்,**

அன்பர்களே !

இன்றைய நாள் பெருமானின் திருநாள் - அதிலும் சைவப்பெருமானின் திருநாள். பெருமான் யார் என்று சிந்தியுங்கள்? இதோ அலங்கரிக்கப்பெற்றிருக்கின்ற திருமுறைகள் பனிரண்டு இருக்கின்றனவே; இவைகளை அருளிச்

செய்தவர்களே பெருமான்கள். எம்பெருமானுக்கும் இப் பெருமான்களுக்கும் வேறுபாடு இல்லை. இவர்களுடைய கரணங்களெல்லாம் சிவகரணங்கள். இவர்களும் முத் தொழில் செய்வார்கள். இத்தகைய சிறப்புடைய இப்பெரு மான்களுக்குள்ளே முதல்வராக விளங்குபவர்கள் ஞானசம் பந்தசுவாமிகள். சிறுவயதில் குளக்கரையில் அழுதபோது ஆண்டவன் கட்டளைப்படி அம்மையார் ஞானத்தைப் பாலு டன் குழைத்து உண்பித்தார். உண்டவுடனே உண்டவாயி லிருந்து தோன்றிய பாட்டுத்தான் முதல் திருமுறை முதற் பாட்டு. முதன் மூன்று திருமுறை சம்பந்தர் அருளியது.

அடுத்த 4, 5, 6 என்ற மூன்று திருமுறைகளும் அப்பர் சுவாமிகளால் அருளப்பெற்றன. இறைவனால் சூலைநோய் கொடுத்து ஆட்கொள்ளப் பெற்றவர் அப்பர். அவருக்கு இறைவன் ஏன் சூலைநோயைக் கொடுக்கவேண்டும் என்ற கேள்வி எழலாம். எதையும் ஆராய்ந்துபார்க்கின்ற உலகம் அல்லவா இப்பொழுது. சேக்கிழாரே அதற்கு விடை சொல்லுகின்றார். எது சிறந்த சமயம்? எது மெய்ச் சமயம்? எது பொருட்சமயம்? என்று ஆராய்ந்து ஏதோ ஒருசமயம் சிறந்தது என்ற முடிவுக்கு வந்து, சைவத்தை விட்டு வேற்றுச் சமயமாகிய புறச்சமயம் சார்ந்தார். ஆனால் அவரது உடன் பிறந்தவரான திலகவதியார் மதமாறவில்லை. 'தம்பியை எப்படியாவது தடுத்தாட்கொள்ள வேண்டும்' என்று ஒவ் வொருநாளும் பெருமானிடம் முறையிட்டு வந்தார். அதன் பலனாக இறைவன் சூலைநோயை விடுத்தார். ஆகவே சூலை 'அருள்பெருகு சூலை' எனப்பட்டது. 'சூலைநோயல்லவா என்னை ஆட்கொண்டது; இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்' என்றுகூட அப்பர் புலம்புகின்றார்.

இனி, மூன்றாவதாக உள்ள பெருமான் சுந்தரர். இறை வன் சுந்தரரது ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு ஆட்கொண்டார். அப்படி ஆட்கொள்ளப்பெற்ற அச்சுந்தரர் பெருமான் அருளியது ஏழாந்திருமுறை. இப்படி திருமுறை யாசிரியர்கள் ஒவ்வொருவரும் பெரிய ஆசாரிய புருஷர்கள்.

சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடி அரங்கேற்றிய உடனே கேட்ட அநபாயன் புராணத்தை, யானைமீதுவைத்து, சேக்கிழாரையும் இருத்தி, அவர் தனக்கு அமைச்சர்தானே என்பதையும் மறந்து, தானே வெண்கவரி வீசிவந்தான். அந்த காலத்து அரசாங்கம் எப்படி இருந்திருக்கும்; சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இப்படி இவர்கள் பாடிய பாட்டுக்கள் பக்திப் பாடலாக ஒருபுறம் இருந்தாலும், 'நீங்கள் இப்படி வாழவேண்டும்' என்று அறிவுறுத்துகின்ற போது நமது வாழ்க்கையில் அநுசரிக்கவேண்டிய சட்டநூலாகக்கூட இருக்கின்றதல்லவா? இன்னும் பாருங்கள். இப்பொழுது சொல்கின்றூர்களே பொதுவுடைமைக்கட்சி என்று. இதுகூட இவர்கள் புதிதாகக் கண்டு பிடித்துவிட வில்லை. சுமார் 1350 வருஷங்கட்கு முன்பே இருந்ததுதான். அப்பொழுது வாழ்ந்த சம்பந்தர் சொல்கிறூர்; என்ன சொல்கிறூர்? அவர் சொல்வது பொதுவுடைமையல்லவா? 'வையகம் துயர்தீர்க' உலகம் துன்பத்திலிருந்து விடுபடட்டும். உலகம் என்றூல் மக்கள்தானே. அவர்களுக்கு எவ்வளவு பரந்தநோக்கம் இந்த காலத்தில் எங்குபார்த்தாலும், அவர் ஒழிக; இவர் ஒழிக; என்ற கோஷங்கள். இது பொதுவுடைமையா? சம்பந்தர் சொன்னது பொதுவுடைமையா?

எடுத்த எடுப்பிலேயே சம்பந்தர் 'வாழ்க அந்தணர்' என அந்தணரை வாழ்த்துகிறூர். அவர்கள் யாககர்த்தர்கள். யாகம் சரிவர நடந்தால் மழைபெய்யும். வள்ளுவர்கூட வான்சிறப்பு என்று ஓர் தனியதிகாரமே கூறியுள்ளார். சம்பந்தரும் 'வீழ்க தண்புனல்' என்கிறூர். இப்படி மழை பெய்தால் பிறகு பஞ்சம் ஏது? பஞ்சம் இல்லையானுல் துன்பத்திற்கு இடமேயில்லை. ஆகவே அடுத்து 'ஆழ்க தீயது எல்லாம்' என்றூர். இப்பொழுது சில கூட்டத்தார்கள் வீழ்க, ஆழ்க என்றெல்லாம் பெருமுழக்கம் செய்கின்றூர்களே. இச் சொற்கள் சொல்வகையில் ஒன்றுயிருந்தாலும் கருத்துவகையில் பரோபகாரவகையில்

615

எவ்வளவு மாற்றம் இருக்கின்றது. இப்படி மழைபெய்து இன்பம் பெருகுமானால் எங்குபார்த்தாலும் சிவநாம முழக்க மல்லவா கேட்கும். ஆகவேதான் "எல்லாம் அரன் நாமமே சூழ்க" என்கிறார். சம்பந்தர்மனநிலை அன்று அப்படி இருந்தது. இத்தகைய சிறந்த கருத்துக்கள் எவ்வளவோ பொதிந்து கிடக்கின்றன திருமுறைகளில். அத்திருமுறை விழாவிலே - அவை போதிக்கப்படுகின்ற பாடசாலை ஆண்டுவிழாவிலே, ஒரு அமைச்சர் கலந்துகொண்டு பரிசுகள் வழங்கப்போகிறார் என்றால் அப்பெருமை யாருக்குக் கிடைக்கும். அதனால்தான் மந்திரி அவர்களைக் கண்டவுடனே, "இன்றைய நாள் உங்கள் வாழ்நாளிலேயே மிகச் சிறந்தநாள்" என்று சொன்னேன். அவர்கள் வகிக்கும் பதவி இன்று அவர்களிடம் இருக்கலாம்; நாளை மற்றொருவரைச் சாரலாம்; பிறகு இவர்களையே தேடி வந்தும் அடையலாம். 'காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின்' என்பதுபோல இத்தகைய சமயப்பணி இவர்களுக்கு இன்று கிடைக்குமானால் இது இவர்களுக்குப் பெருமைதரக் கூடியதுதானே.

மற்றொன்று பாருங்கள். மக்களிடத்தில் அன்பு இவர்களுக்கு நிறைய உண்டு. அதற்கு என்ன காரணம்; இவர்களுக்குரிய சிவபக்தி. சிவபக்தியிருந்தால் அடியவரிடத்தில் தானே அன்புண்டாகும்; அடியார் அன்பு இருந்தால் மற்றைய எல்லாவுயிரிடத்தும் அன்பு உண்டாகும்; இப்படித்தான் அன்பு படிப்படியாக வளருகின்றது. மக்களிடத்துள்ள அன்பினாலே தம்முடைய காலத்தில் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எப்பொழுதும் செயலாற்றிவருகின்ற நமது அமைச்சர் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகித்துச் சிறப்புற நடத்திவைப்பார்கள். அமைச்சர் அவர்களுக்கும் மற்றுமுள்ள பேரன்பர்களுக்கும் ஸ்ரீ அமுதகடேசப்பெருமானின் அருட்சத்தியாகிய அபிராமி அம்மையார் நல்லன எல்லாம் தந்து காப்பாராக" என்று ஆசி அருளி விழாவைத் தொடங்கி வைத்தார்கள். தேவஸ்தானத் தேவாரவகுப்பின் சார்பில், தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அச்சிட்ட வரவேற்புரையை வாசித்து, கனம் மந்திரி அவர்களிடத்தில் அளித்தார்கள் மாலை சூட்டி உபசரித்தார்கள்.

கனம் மந்திரி அவர்கள் தலைமையுரையாக,

மகாசந்நிதானம் அவர்களே! அன்பர்களே!

இந்த விழாவில் தலைமை வகிக்கும்படியான வாய்ப்பு எனக்குக் கிடைத்ததுபற்றிப் பெருமகிழ்ச்சி யடைகிறேன். என் நன்றியையும் வணக்கத்தையும் செலுத்திக் கொள்கிறேன். இப்பொழுது எனக்கு வாசித்துக் கொடுக்கப்பெற்ற வரவேற்புரையில் 'ஆதீனத்தின் சேவை உலகம் அறியும்' என்றுகுறிப்பிடப்பட்டிருக்கிறது. உலகத்தில் நானும் ஒருவன். பத்திரிகை வாயிலாக அவ்வப்பொழுது ஆதீனம் ஆற்றிவரும் அரிய சேவைகளை அறிந்து மகிழ்ந்து வருகின்றேன். அறிந்தது முதல் தருமபுர ஆதீனம் என்றாலே ஒரு தனிப்பற்று என் மனத்தில் ஏற்பட்டுவிட்டது. ஆதலால் நிர்வாகிகள் கேட்டுக் கொண்டவுடனே யாதொரு தடையும் இன்றி ஒத்துக்கொண்டேன்; இங்கு வந்துவிட்டேன். மகா சந்நிதானம் சொன்னது போல இந்நாள் எனக்குச் சிறந்தநாள் எல்லோர்க்கும் ஒரு பெரியநாள்.

இன்று காலையில் ஆதீனத்தைச்சார்ந்த ஒரு தேவஸ்தானத்துக்குச் சென்றிருந்தேன். பார்க்கப் பார்க்க சந்தோஷமாக இருந்தது. கோயில் சுத்தமாக வைக்கப்பெற்றிருக்கிறது. அதனால் மனம் நிம்மதியாக இருக்கிறது. அதற்குத்தானே நாம் கோயிலுக்குப் போகிறோம். கடவுள் இல்லை என்று சொல்பவர்கள்கூட அந்த ஆலயத்திற்குச் சென்றால் அவர்களை அறியாமலேயே பக்தி ஏற்பட்டுவிடும். செல்வத்தோடு மன உறுதியும் இருந்தால் நல்லது. எனக்கு மனவுறுதி இன்னும் ஏற்படவில்லை. சூழ்நிலை அப்படி ஆக்கிவிடுகிறது. கொஞ்சம் வயசாகிவிட்டால் தானே வரும் என்று நினைக்கிறேன். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன்.

மாடல் பண்ணை, மாடல் கிராமம் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதுபோல அந்த (வேலூர்) தேவஸ்தானம் மாடல் தேவஸ்தானமாக இருக்கிறது என்று சொல்லலாம். அவ்வளவு அருமையாக இருக்கிறது. அதைப்போல மற்றையோர்களும் கோயிலை வைத்துக் கொள்வார்களானால் எவ்வளவோ நன்றாக இருக்கும்.

இன்றைய விழா தேவாரவிழா. தேவாரம் பாடப்பாட இனிமையாக இருக்கின்றது. கேட்டுச் சந்தோஷமடைகிறேன் நான். அந்தகாலத்தில் நான் படிக்கின்றபோது தமிழார்வம் அவ்வளவு இல்லை. இப்பொழுது மடங்களும், அரசாங்கமும் தமிழ் வளர்க்கிறது. அதன் மேன்மை பிரகாசப் படுத்தப்படுகிறது. மகா சந்நிதானம் சொன்னதுபோல பொதுவுடைமை அன்று மறைந்து இருந்தது. அடங்கியிருந்தது. கோயில் வழிபாட்டில் சுகாதாரம் இருந்தது; உடல்நலம் பாதுகாக்கப் பெற்றது. இன்னும் எவ்வளவோ இருந்தன,

திருப்பதியில் பெருமாள் மலைமீது இருக்கிறார். அதுபோல அநேக இடங்கள் உண்டு. வழிபட வேண்டுமானால் படி வழியாக ஏறிச் செல்லவேண்டும். வயதானவர்களுங்கூட வழிபடப் போகின்றார்கள். படிகளில் ஏறிச் செல்கின்றார்கள். கொஞ்சம்கூட களைப்பு என்பதே அவர்களுக்குக் கிடையாது. பக்திக்குமுன்பு களைப்பு என்னசெய்ய முடியும்? அதுமட்டுமா உடலுக்கு உறுதி அளிக்கின்றது. ஆகவே உடல் நன்மையடைகிறது வழிபாட்டினால் என்று சொல்லலாம். பிறகு ஆத்மலாபம். சாணம் தெளித்து மெழுகுகின்றார்கள். அது சுகாதாரத்தை அளிக்கிறது. பக்தியிருந்தால் உலகம் சுபிக்ஷம் அடைகிறது.

ஏழு, எட்டு வருஷமாக எங்கு பார்த்தாலும் பஞ்சம், கஷ்டம், உணவில்லை; தண்ணீர் இல்லை. இதற்கு முன்பெல்லாம் பஞ்சம் வந்திருக்கின்றது. ஆனால் சிற்சில இடங்களில் தான் கஷ்டம் இருந்திருந்ததாகத் தெரிகிறது. இந்த ஏழு எட்டாண்டுகளாக மாகாண முழுவதுமே பஞ்சம் தலைவிரித்

618

தாடியது. பிரார்த்தனை வழிபாடு காரணமாக எங்கும் மழை பெய்துவிட்டது. உணவுப்பொருளும் அதிகரித்துவிட்டது. ஒருவாறு பஞ்சம் ஓடிவிட்டது. தெய்வ பக்தியிருந்தால் நமக்குத் துன்பமே வராது.

மனம்போல மாங்கல்யம் என்பார்கள். மனம் சுத்தமாக இருந்தால் பக்தி வளரும். அரசாங்கம் என்னசெய்ய முடியும். மக்களுக்குப் பக்தியிருந்தால் அரசாங்கம் நன்றாக இருக்கும். குடிகள் எப்படி அப்படிதான் அரசாங்கம். ஆகவே நாட்டு மக்கள் பக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் தெய்வத்துக்குப் பயந்து நடக்கவேண்டும். விதண்டாவேதம் வேண்டுவதில்லை. அறியாமையால் சிலர் ஏளனம் செய்யலாம். அதுபற்றி நமக்குக் கவலையில்லை. இசையைப்பற்றி ஒன்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

அண்ணாமலை ஸர்வகலாசாலையில் ஒரு நிகழ்ச்சி. நான்கு செடிகளைத் தனித்தனி இரண்டு இரண்டாக வெவ்வேறு இடங்களில் நட்டுவைத்தார்கள். காலாகாலங்களில் எரு விடுதல், நீர்பாய்ச்சுதல் எல்லாம் சரிவரச் செய்யப்பெற்றன. ஆனால் ஓரிடத்திலுள்ள இரண்டு செடிகட்குமட்டும் அருகே இசை வாசிக்கப்பெற்று வந்தது. கொஞ்சகாலம் கழித்து அவைகளின் வளர்ச்சிமுறை கண்காணிக்கப்பெற்றது. அதில் தனியேவளர்ந்த செடிகளைக் காட்டிலும் இசையூட்டப்பெற்ற செடிகளின் வளர்ச்சி அதிகம் காணப்பட்டது. ஆதலால் இசையோடுகூடிய பாடல் பக்திக்கு மட்டுமல்ல; வளர்ச்சிக்கும் பயன்படுகிறது என்று தெரிகின்றது. ஆகவே இசைத் தோத்திரமாகிய இத்திருமுறைகளை யாவரும் பயிலவேண்டும். சமய வளர்ச்சிக்கு மடங்களில் - சிறப்பாகத் தருமபுரம் நல்ல தொண்டு செய்கிறது. பார்க்கவும் கேட்கவும் ரொம்ப சந்தோஷமாயிருக்கிறது மைசூர் ராஜ்யம் சுபிக்ஷதேசம் அதுபோல இத்தருமபுர ராஜ்யம் அமைந்திருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இத்தகைய பணியில் பங்கு கொள்ளச் செய்த மகா சந்நிதானம் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து அருமையான

649

இரண்டு பிரசங்கங்கள் இருக்கின்றன; நாமெல்லாம் கேட்க வேண்டும்" என்று மிக அருமையாகப் பேசினார்கள். பிறகு அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் வித்துவான் திரு. **ஜி. சுப்பிரமணியப் பிள்ளை** அவர்கள் 'கடவுளைக் கண்டவர்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சென்னை பல்கலைச்செல்வர் திரு. **தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை** அவர்களும் ஏரி நிறைந்தனை செல்வன் கண்டாய் என்ற தொடரைப்பற்றி மிக அருமையாகப் பேசிமுடித்தார்கள். அடுத்து திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் ஆதீனக்கல்லூரி மாணவனுக்குப் பொற்பதக்கப்பரிசு அனுப்பி வைக்கப்பெற்றிருக்கிறது என்பதை விபரமாக அறிவித்தார்கள்.

குன்றக்குடி பொற்பதக்கப் பரிசு:

தருமபுர ஆதீனப்பல்கலைக் கல்லூரி வித்துவான் முடிவு நிலை (Final) வகுப்பில் முதல்தரமாகத் தேர்ச்சி பெறுகின்ற மாணவர் ஒருவர்க்கு, குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள்** அவர்கள் கடந்த இரு ஆண்டுகட்கு முன் **பொற்பதக்கப் பரிசு** ஆண்டுதோறும் வழங்கத் திருவுளங் கொண்டார்கள். அதையும் தருமை மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நினைவுப்பரிசு என்று வழங்கத் திருவுள்ளங்கொண்டார்கள். அதன்படி சென்ற ஆண்டுப்பரிசு தருமை ஆவணிமூலத் திருநாளில் அவர்கள் திருக்கரத்தாலே வழங்கப்பெற்றது. இன்றைய விழாவில் 1952 மார்ச்சில் கல்லூரி முதல்வராகத் தேர்ந்த வித்துவான் திரு. வை. திருஞானசம்பந்தனுக்கு கனம் மந்திரி அவர்கள், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் அனுப்பிவைக்கப்பெற்ற அப்பொற்பதக்கத்தை வழங்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுள்ளப் பாங்கின்வண்ணம் தேவஸ்தானத் தேவார வகுப்பு மாணவிகளுக்கும் பரிசுப் பொருள்களை வழங்கினார்கள்.

கனம் மந்திரி அவர்களின் முடிவுரைக்குப் பிறகு கடவுள் வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது. திருமுறைச் சுவடிகட்கு ஆராதனை நடைபெற்றது. கோயில் வழிபாடும் சிறப்பாக நடைபெற்றது,

திருக்கடவூர் தேவஸ்தான தேவாரவகுப்பு ஆண்டுவிழாவில்
தலைமை தாங்கிய
சென்னை அரசாங்க ரெவின்யூ மந்திரி

கனம் ஸ்ரீ M. A., மாணிக்கவேல் நாயகர் அவர்களுக்கு

வாசித்தளித்த வரவேற்புரை.

சென்னை அமைச்சராகிய செம்மலே! வருக.

அரசாங்கம், கடமையில் கருத்தூன்றிய புனிதர்கள் வாழ்கின்ற புண்ணியச் சாலை. அங்கே மக்களுக்குச் சேவை புரியும் மனிதமாணிக்கங்களே இருக்கத் தகுதியுடையவர்கள். சேற்றுநிலத்தில் ஊன்றுகோல்போல, இன்னலரால் மக்கள் எங்கும் வேளையிலே இன்னலைப்போக்கி இன்பப்பாதையில் மக்களை அழைத்துச்செல்வது மந்திரிகளின் மாபெருங்கடமை, இதனை உணர்ந்து, நம் சென்னை அரசாங்கத்தில் - தக்ககாலத்தில் மந்திரிசபையை அமைத்த கனம் இராஜாஜீ அவர்கள் தலைமையில் தாங்கள் பொது ஜனங்களுக்குச் செய்துவரும் தொண்டுகள் என்றும் மறக்கமுடியாதன. தமிழ் நாட்டின் அறிவுத் தந்தை வள்ளுவனார் கண்ட அரசியல்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தங்களின் சேவை என்றும் இந்நாட்டுக்குத் தேவை. கடவுள்பக்தியின் அவசியத்தைப் பற்றியும் விளக்கும் தங்கள் உரைகள் சமுதாயச் சோலையில் புது மணத்தை வீசிவருகின்றன. இத்தகைய தாங்கள் எங்கள் தேவஸ்தான திருமுறைவகுப்பு ஆண்டுவிழாவில் தலைமைதாங்கிச் சிறப்பிப்பது நல்லதொரு வாய்ப்பாக அமைந்துவிட்டது என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

621

தொண்டின் சிறப்பும் தூய்மையும் கொண்டோய் ! வருக; வருக.

தொண்டு தூய்மையின் விளைவு உண்மையான உள்ளமே உண்மையான தொண்டுக்கு வித்தாகிறது. இவ்வாறு தொண்டும் தூய்மையும் ஒருங்கமையப் பெற்ற தெய்வீகக் கவிஞர்களான சமயாசாரியர்கள் அவதாரபுருஷர்கள். அவர்களது திருப்பாடல்களிலே அருள்மணம் கமழும். அவை என்றைக்கும் ஆன்மாக்களுக்கு இன்ப வாழ்வின் வழிகாட்டிகள். அத்தகைய பெரியோர்களது வாய்மலர்ப்பிறந்த தேனமுதம் திருமுறை. அதனைப்போதிக்கும் எங்கள்பாடசாலையின் ஆண்டுவிழாவில் தொண்டுக்காகவே வாழ்க்கையைப் பயன்படுத்திவரும் அமைச்சராகிய தங்கள் தலைமை ஏற்பட்டது குறித்துப் பெருமிதமடைகிறோம் நாங்கள்.

அறிவுரை கூற அமர்வோய் ! வாழி.

ஆதீனம் செய்துவரும் சிவப்பணிகளை உலகம் அறியும். ஆங்காங்கு தேவஸ்தானங்கள்தோறும் திருமுறை வகுப்புகள், அநாதைவிடுதிகள் நடத்திவருகிறது. ஆதீனச் சார்பிலேயே வடமொழி தென்மொழிக் கல்லூரிகள், தேவார சிவாகம பாடசாலைகள் ஆரம்ப நடுத்தரப்பள்ளிகள் அமைத்திருப்பதை யாவரும் அறிவர். இவைகளோடு நூல்வெளியீட்டுப் பணியிலும், பிரசாரப் பணியிலும் சிறப்புற்றுத் திகழ்கிறது. இவ்வாறு எல்லாப்பணிகளையும் ஒருங்கியற்றி எம்மனோர்களை உய்வித்துவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு முதற்கண் எங்கள் வணக்கத்தைச் செலுத்திக்கொள்ளுகின்றோம். தலைமை ஏற்றுச் சிறப்பிக்க வந்திருக்கும் தங்களுக்கு எல்லாம்வல்ல அமுதகடேசப்பெருமான் நல்லன எல்லாம் தந்து காப்பாராக.

622

வைத்தீசுவரன்கோயிலுக்கு ரெவின்யூ மந்திரி விஜயம்

தருமபுர ஆதீனத்தைச்சார்ந்த வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீ வயித்தியநாதப் பெருமான் ஆலயத்திற்கு, சென்னை ரெவின்யூ மந்திரி கனம் ஸ்ரீ **M. A. மாணிக்கவேல் நாயகர்** அவர்கள் 4—11—53 புதன்கிழமை காலை வழிபாட்டிற்குச் சென்றார்கள். கோயில் மரியாதையுடன் மந்திரி அவர்கட்கு மலர்மாலை சூட்டி உபசரிக்கப்பெற்றது. ஒவ்வொரு சந்நிதியிலும் வழிபாடு நடைபெற்றது. பிறகு தேவஸ்தானத்திலுள்ள அனாதை விடுதிக்கு விஜயம்செய்து பார்வையிட்டார்கள். அங்கு ஒரு சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. கனம் மந்திரி அவர்கள் பேசுகையில் 'தேவஸ்தானம் தூய்மையாக வைக்கப்பட்டிருக்கிறது. மனம் நிம்மதியடைகிறது. தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கட்கும் தெய்வநம்பிக்கை தோன்றுகிறது. எனக்கு ரொம்ப சந்தோஷம்' என்றெல்லாம் பாராட்டிப் பேசி, விடுதிக் குழந்தைகட்குப் புத்தாடைகளையும், தின்பண்டங்களையும் வழங்கினார்கள்.

ஸ்ரீமத் கட்டளை சுவாமிகள் நன்றிகூறுகையில் "முன்பு ஒரு அமைச்சர் வந்து இந்த விடுதியைத் திறந்துவைத்தார்கள்; அதனுடைய தலைத்தீபாவளி இன்று. இன்றும் ஒரு அமைச்சர் வந்து பார்வையிட்டுச் சிறுவர்களை வாழ்த்துகின்றார்கள். இது நம் வயித்தியநாதப் பெருமானின் திருவருட் பெருக்கைக் காட்டுகின்றது" என்றெல்லாம் குறிப்பிட்டுப் பேசினார்கள். தேவாரவகுப்பு ஆசிரியர் திருமுறை ஓதக் கூட்டம் முடிந்தது.

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் – உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ. 2—0—0

கிடைக்குமிடம் ;- **மானேஜர்,**
தருமபுர ஆதீனம், தருமபுரம்.
மாயூரம் போஸ்ட்.

கந்தசஷ்டி விழாச் சொற்பொழிவுகள்

தருமபுர ஆதீனத்தைச்சார்ந்த மாயூரம் குமரக்கட்டளை தேவஸ்தானம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும், வேளூர் (வைத்தீசுவரன்கோயில்) தேவஸ்தானம் ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமிக்கும் 7—11—53 சனிக்கிழமை முதல் கந்த சஷ்டி விழா தொடங்கி நடைபெற்றுவருகிறது. சண்முகாரூப மான லக்ஷார்ச்சனையும் நிகழ்ந்துகொண்டுவருகிறது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் வழக்கம்போல் இந்த ஆண்டும் சஷ்டி உபவாசமிருந்து நாடோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி வழிபாடும் செய்தருளுகின்றார்கள்.

வேளூரில் நடைபெற்றுவரும் கந்தசஷ்டி விழாவில் நிகழ்கின்ற கந்தபுராணச் சொற்பொழிவுகளின் விபரம்:— 7—11—53ல் தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் புலவர் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் "உற்பத்தி காண்டம்", 8—11—53ல் தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் "அசுரகாண்டம்", 9—11—53ல் தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழாசிரியர் வித்வான் திரு. மு. ஆறுமுகதேசிகர் "மகேந்திர காண்டம்", 10—11—53ல் தருமபுர ஆதீனம் ஓரியண்டல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான் திரு. வை. திருஞான சம்பந்தம் "யுத்தகாண்டம்"; தருமபுர ஆதீனப் பாடசாலை தேவார ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் "திருப்புகழ்", 11—11—53ல் தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்வான் திரு. வி. சா. குருசாமி "தேவகாண்டம்"; தருமபுர ஆதீனக் கல்லூரி மாணவர் திரு. சி. சம்புலிங்கம் "என்றும் இளையான்", 12—11—53ல் தருமபுர ஆதீனப் பாடசாலைத் தமிழாசிரியர் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் "தக்ஷ காண்டம்"; தருமபுர ஆதீனக் கல்லூரி மாணவர் திரு. எம். சிவசம்பு "முருகனும் நக்கீரனும்".

மாயூரம் குமரக்கட்டளையில் நடைபெற்றுவருகின்ற திருமுறைச் சொற்பொழிவுகள், கந்தபுராணச் சொற்பொழிவு

624

களின் விபரம்:— 7—11—53ல் திருப்பனந்தாள் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் "அலங்காரப்பயன்", வித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகர் "திருமுருகாற்றுப்படை", திரு. ஆர். வேலாயுத ஓதுவார் "சம்பந்தரும் முருகனும்". 8—11—53ல் திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "கந்தர்கலி வெண்பா", புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார் "அப்பரும் குமரனும்", வித்துவான் திரு. மு. ஆறுமுகதேசிகர் "பரவை கேள்வனும் வள்ளி மணாளனும்". 9—11—53ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் வித்துவான் திரு. ஜி. சுப்பிரமணியபிள்ளை M.A., B.L., "தாரகன் வதை", புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் "திருவிசைப்பாவில் திருமுருகன்", ஆதீனக்கல்லூரி மாணவர்கள் சிவசம்பு, ஜம்புலிங்கம், சுந்தரராஜன் ஆகியோர் "சேக்கிழார் கண்ட செவ்வேள்". 10—11—53ல் நாகை நாஷனல்ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் "சிங்கமுகன் வதை". 11—11—53ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்விரிவுரையாளர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணம் "சூரபதுமன் பெற்றபேறு". 12—11—53ல் திருவாரூர் இராஜன்கட்டளை கட்டளைவிசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள் "சமய தத்துவங்கள்".

9—11—53 திங்கட்கிழமை மாலை 5 மணிமுதல் தக்க பக்கவாத்தியங்களுடன் ஆதீனப்பாடசாலை தேவார ஆசிரியர், மாணவர்கள், ஆதீன தேவஸ்தானத் தேவாரவகுப்பு ஆசிரியர்கள் மற்றும் தமிழிசைப் பண்மணிகள் ஆகியோர் இன்னிசைக் கருவிகளுடன் பன்னிருதிருமுறைப் பாராயணம் செய்துவர, யானைமீது திருமுறை வீதியுலாக் காட்சி நடைபெற்றது. ஸ்ரீ மாயூரநாதசுவாமி தேவஸ்தான தேவாரவகுப்பு ஆசிரியர், மாணவர்களும் விழாவில் கலந்துகொண்டு பணியாற்றினர்கள்.

மதிப்புரை

சகலகலாவல்லிமாலை

கி. பி. 17-ம் நூற்றாண்டில் விளங்கிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்ற இச்சிறுநூல், வித்தையில் விருப்பமுடைய இளைஞர் உள்ளத்தில் இன்றும் நிலவி வருகிறது. 'மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என் பண்கண்டளவில் பணியச் செய்வாய்' என்ற சுவாமிகள் பிரார்த்தனை சிறந்த அநுபவமாக அனைவரிடத்தும் திகழ்கிறது. இத்தகைய சிறந்த இந்நூல், விஜய ஆண்டு விஜயதசமி வெளியீடாக – மூன்றாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் இந்தியிலும் ஆங்கிலத்திலுமாக மொழிபெயர்ப்புக்கள் தரப்பட்டுள்ளன.

சிவபோகசாரம்:

தெய்வ வாழ்வில் ஈடுபட்ட ஞானிகளின் பாடல்களே அனைவர்க்கும் வழிகாட்டியாய் விளங்குவன. அத்தகைய வரிசையில் மதித்து எண்ணத்தக்கது இந்நூல். இதனை ஆக்கி அளித்தவர்கள் தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக சுவாமிகள். பெரும் பொருளை உள்ளடக்கிய வெண்பாக்களால் ஆகியது. 'காண்பதும் பொய்; கேட்பதும் பொய்' 'நெருப்பென்றால் வாய் சுடுமோ?' 'சும்மா இருக்கை சுகம்' 'நல்லார் பொல்லார் என்று நாடுவதென், எல்லாம் சிவன்செயலென்றெண்' 'வருகுவது தானேவரும்' 'ஈசனருள் அல்லால் ஒருவர் துணையுண்டோ' 'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்' என்பனபோன்ற பல உபதேசமொழிகள் படிக்கப்படிக்க இன்பமளித்து நல்வழியில் செலுத்துவன.

இத்தகைய இரண்டு அரிய பெரிய நூல்களையும் மிகச் சிறிய வடிவில், எல்லாரும் படித்து இன்புறவேண்டும் என்ற பெருநோக்குடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆணை வழி ஷை மடத்தின் இளவரசு ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். வேண்டுவோர் ஸ்ரீ காசிமடத்தில் இலவசமாகப் பெறலாம்.

626

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஸு கார்த்திகை-மீ 1-உ முதல் 30-உ முடிய)
(16—11—53 முதல் 15—12—53 முடிய)

1. **மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் சுபசந்தோஷத்தைத் தரும். பரணி 1, 2 பாதங்கள் கிலேசத்தோடு சுபம் காட்டும், அதிக விரயமும் வியாதிபீடையும் தரும். பரணி 3, 4 பாதங்கள் சத்துரு பயத்தையும், தூரபிரயாணத்தையும், புண்ணியக்ஷேத்திர நதிஸ்நானங்களையும், மேலோர் பெரியோர் நேசத்தையும், அதிக செலவுகளையும் மிகுந்த சிரமத்தோடு பல கவலைகளையும், கஷ்டநஷ்டங்களையும் தந்து கிஞ்சித் தெய்வபலம் தோன்றி, மனம் சாந்தியடையும். கார்த்திகை முதல் பாதம் தொழில் லாபம், இல்லற சுகம்; சுபகாரியம் இவைகளை தரும். புதனும் வியாழனும் சுபவாரமாகும்.

2. **விருஷபம்:** கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை, ரோகிணி இரு நக்ஷத்திரபலனும் மிசிரமாய் நடக்கும், வியாதி பீடை, அலைச்சல், இடம் மாறல், தொழில் நஷ்டம், குடும்பத் தொல்லை, அதிகச் சிலவுகள், மனைவியாகூலம் இவைகளைத் தந்து ஒரு பெரியோர் அனுக்கிரகத்தால் கஷ்டம் நீங்கும். மிருகசீரிஷ பலன் கபடசிந்தனை, பொய் வார்த்தை பேசுதல், நம்பிக்கை துரோகம், மேலோர் பெரியோர் கோபம், ராஜாங்க விரோதம், தேவகோபம், குருசாபம், வைத்தியச் செலவு மிகுதி, குடும்ப கலவரம், வாகனக்குறை முதலியவைகளைக் கொடுக்கும். எதிர்பார்க்கிறபடி எதுவும் நடக்காது. தெய்வபலமிருந்தால் தள்ளலாம். புதனும் சனியும் சுபவாரமாகும்.

3. **மிதுனம்:** மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீர்ஷமும், திருவாதிரையும் மிசிரபலனாய் நடக்கும், கஷ்டமும், சுகமும், மாறிமாறிநடக்கும், அதிகசிரமம், அலைச்சல்

உஷ்ணரோகம், வேலையாள் தொல்லை, வியவசாய நஷ்டம், சதா குரோதபுத்தி, பலஹீனம், அதிக கவலைகளையும் முடிவில் எல்லாம் நன்மையாகவும் லாபகரத்தோடும் நடக்கும். புனர் பூசத்துக்கு நினைத்ததெல்லாம் நேர்மாருக நடக்கும், பந்து மித்திராள் விரோதம், வியவகார உற்பத்தி, துர்புத்தி, வேலை யாள் தொல்லை, தொழில் நஷ்டம், அபவாதம், குடும்ப கஷ்டங் கள், தேவசாபம், சரீரத்தில் விருணவியாதி முதலிய துக்க பலனே நடக்கும், தெய்வபலமிருந்தால் தப்பலாம். சனிவாரம் அசுபத்தையும், குருவாரம் வியாதியையும், தரும். புதன் நலன் காட்டும்.

4. **கடகம்:** புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

ஆயில்ய நக்ஷத்திர பலன் சந்தோஷத்தைத் தரும், தெய்வ சக்தி பிரகாசிக்கும், நினைத்ததெல்லாம் கைகூடும். மற்ற இரு நக்ஷத்திர பலனும் சதா அலைச்சலையும் தொழில் நஷ்டத்தையும் வீண் மனஸ்தாபங்களையும், துஷ்டசேர்க்கையையும் நாஸ்திகத் தையும், நல்லோர் பெரியோர் சாபத்தையும் தரும். சதா அமங் கலமாகவே இருக்கும். சனி வியாழன் கஷ்ட பலனைத்தரும். செவ்வாய் நலன் காட்டும்.

5. **ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

மக நக்ஷத்திர பலன் விசேஷ மேதாவித்தனத்தையும் விஞ் ஞானசக்தியால் புதிது புதிதாகக் கண்டு பிடித்தலையும் உலக மதிப்பையும் தரும். அகம்பாவமும் துஷ்டச்சேர்க்கையும் அதிக மாகும். மற்ற இரு நக்ஷத்திரபலனும் கஷ்டத்தோடு சுகம் தரும். புதன் சுபவாரம்.

6. **கன்னி:** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் முக்காலும் நன்மை தரும். ஸ்வதேசகமனம், தூர தேசத்திலிருந்து அழைப்பு, உத்தியோக லாபம், கீர்த்திபத்திரம் கிடைத்தல், சுபசமாசார வரத்து, தெய்வசக்தி ஓங்குதல் முதலிய சுபங்கள் நடக்கும். மற்ற இரு நக்ஷத்திர பலனும் மஹத்தான சந்தோஷத்தைத்தரும், அடிக்கடி பெரியோர் மேலோர் தரிசனம், தெய்வசக்தி ஓங்குதல், குடும்ப சந்தோஷம், விசேஷ கௌரவம்,

அடிக்கடி சஞ்சார பலன். தொழில் மேன்மை, அடிமையாள் சேர்க்கை, நூதன வாஹனபிராப்தி, வஸ்திராபரணச்சேர்க்கை, காலிகன்று விருத்தி, நன்மதிப்புக்கள் உண்டாகும். மத்தியில் துர்ப்புத்தி தோன்றலும், பதவிக்கு ஆபத்துக் காட்டுதலும், சத்துருக்களுடைய பயமும்தந்து மாறும், உஷ்ண ரோகத்தையும் வயிற்றுபோக்கையும் கொடுக்கும். புதனும் திங்களும் நலன் தரும்.

7. **துலாம்:** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சித்திரைக்கும் சுவாதிக்கும் தெய்வபலம்தான் முன்னின்று சகலமும் நடத்தும் உலகில் ஆச்சரியப்படும்படியான காரியங்கள் எல்லாம் சாதித்துத்தரும். பிரமாதமான புகழும், ராஜசபா பிரவேசமும், எதிர்பாராத அளவில் தனலாபங்களும், தொழில் விருத்தியும், இல்லற சுகபோகங்களும், விவசாய லாபமும் தரும். விசாகத்துக்கு எடுத்ததெல்லாம் நஷ்டமாகவும் வேலைக்காரன் தொல்லையும் தனதான்ய நஷ்டமும் அபகீர்த்தியும் லோபித் தனமும் பெரியோர் சாபமும் கிட்டும். தெய்வ பலமிருந்தால் காலம் ஓடும். சனிவாரம் மஹத்தான பயத்தைத்தரும். புதன் சுபமாகும்.

8. **விருச்சிகம்:** விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

அனுஷம் கேட்டை இரு நக்ஷத்திரபலனும் பிரயாசையோடு சுபம் தரும். அதிக உழைப்பும் சரீரபிரயாசையும் தரும். கஷ்டம் சுகம் இரண்டும் மாறிமாறி நடக்கும். தனநஷ்டமும் வியாதி பயமும் தொழில் குறைவும் உண்டுபண்ணும். விசாகத்துக்கு நாலாம்பாத பலன் அசுபத்தையே தரும். சனியும் புதனும் நலன்காட்டும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

உத்திராட நக்ஷத்திர பலன், சந்தோஷம், லாபம். ஆடை ஆபரணம், மேலோர் பெரியோர் அன்பு. இல்லறசுகம், தொழில் ஓங்குதல், கௌரவ பட்டங்கள், அடிக்கடி சஞ்சார பலன் இவை களைத் தரும். மூலம் பூராடம் இரண்டு நக்ஷத்திர பலனும் கலஹங்களையும், தனதான்ய நஷ்டத்தையும், செய்நன்றி மறத் தலையும், அபகீர்த்தியையும், விவஹார பயத்தையும் ரோக

பீடையையும் உண்டுபண்ணும். புதன் வியாழன் சுபவார மாகும்.

10. **மகரம்:** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

உத்திராடத்துக்கும் சிரவணத்துக்கும், சுகபோஜனம். காரியங்களில் தாமதம் ஏற்பட்டு விஜயம் கிடைத்தல், தொழில் லாபம், உத்தியோக மேன்மை முதலிய சுபங்கள் ஏற்படும், அவிட்டத்துக்குச் சதாகவலையோடு காலம் ஓடும். வரத்துக்கு மிஞ்சின செலவும் கடன் வாங்குதலும் உத்யோக மாற்றமும் பந்து மித்ராளுடைய விரோதமும் காலிகன்று நஷ்டமும் கலஹமும் ஏற்படும். புதன் சுபவாரமாகும்.

11. **கும்பம்:** அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

ஷ ராசிக்காரர்கள் எல்லோருக்கும் சென்ற மாதம்போலவே நடக்கும். அதிலும் விசேஷமாக எதிர்பாராதபடி உந்நத ஸ்தான வாசமும் சுகபோகங்களும் அன்னிய ஸ்தலவாசமும் ஏற்படும். அவிட்டத்துக்கு அதிக உழைப்பில் சுகமும் வம்சவிருத்தி அடையாளமும் பந்துமித்திராளுடைய வரத்தும் ஏற்படும். புதன் வியாழன் வெள்ளி சுபவாரமாகும்,

12. **மீனம்:** பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசி பூராபலனும் சுபமேயாகும். மாதக்கடையில் அதிக வேலை தொந்தரவுகள் ஏற்படும். சபாபூஜ்யத்துவமும், பெரியோர் உபகாரத்தன்மையும், குடும்பம் ஓங்குதலும், பெற்றோர்களால் எதிலும் வெற்றியடையும்படியான செயலும். சென்ற இடமெல்லாம் சிறப்பும், தொழில் மேன்மையும், லாபமும் கீர்த்தியும், மங்கள காரியமும் உண்டாகும். வியாழன் செவ்வாய் சுப மாகும்.

குறிப்பு: கோசார பலன்கள் ஜாதகப்படியே அனுசரித்து நடந்தாலும், இம்மாத பலன் கூடியவரை கோசாரப்படியே தான் நடக்கும், ஏனெனில் உலகில் இதுமுதல் பொதுமக்களுக்கு தெய்வ நம்பிக்கை விசேஷமாய் ஏற்படுமாதலால் ஜன்மநக்ஷத்திர நாமநக்ஷத்திர பலன்கள் சரிவரப் பலன்தரும். தெய்வ பலம் கிடைத்து உலகம் க்ஷேமமடையும்-

இந்த அதிசூக்கும வோங்காரம் என்னும் முத்திராந்தத்திற்கு மேல் மகா சூக்கும வோங்காரம் நடனப் பிரணவானுபவம் கூறுகின்றதற்கு வருமாறு. நிராமயதேவர் நூலின்,

உன்னலு மெழுப்பருனு மொடுக்கலு மென்னுமூன்றிற்
றுன்னிடவுன...துரியந்தான றுவ...சாந்தந்
தன்னிடை யறிவாய் நிற்க தக்கதாம் நடநாநந்த
பின்னமிப் பிரிவினைப்பண் வைத்தறப் பெறப்பின்வைக்கும்.

உரையுணர்விறந்திட்டுமேன் கண்டதோர்கனவே யொப்பத்
தெரிதரு முணர்விற்கேற்றுச் செப்புமாறொன்றுமின்றி
யுரையுணர் விறந்த நட்டத் துற்றிடு மனந்தானந்தந்
திரிதரு பழுதில்பேரா னந்தமே சேர்ந்ததன்றே.

எனவரும். இவ்வாறு திருமந்திரத்தினும்,

உதய மெழுப்பன் மேலுற் றொடுக்கின்ற
கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி
பதிதரு சேதனன் பற்றுந் துரியத்(து)
அதிசுகா னந்தம் நடானந்த மாமே.

எனவும்,

வாக்கிய சுத்தி வருதரா சோதனை
யாக்கு சொரூபமென் மூன்றற்ற முத்திரை
தாக்கும் பிரணவ யோகந்தற் சுத்திமே
லாக்குமந் நாதாந்தத் தானந்த நட்டமே.

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. இவ்வாறு ஞான சித்தியிலும்,

मूकस्वप्नमिवाहुर्निरतिशयानन्दमात्मविज्ञानम् ।
सत्संप्रदायसिद्धं सन्ततजातप्रकाशसद्भावम् ॥

என வருமாற்றான் உணர்க.

59.

கண்ணியிடு மற்றிதனால் அஞ்சாமுறைக்கணின்ற ஆனந்தப் பிரணவானுபவங் கூறுகின்றது. அது வருமாறு. நிராமயதேவர் நூலின் "பேரானந்தமே சேர்ந்ததன்றே" யென்றதன்பின்,

ஆதலால் ஞானமான வனுபவங் நேயத்தான
தீதிலாப் பரமும் ஞாதுருச் சேர்சிவமுஞ் சென்றற்
றேதொன் றின்றிேடு முரையுணர் விறந்தநட்டத்
தாதியாகு...மனுபூதி யதிமுத்தி யாகுமன்றே.

என வரும். இனிக் "கண்ணியிடு முத்திபத்து" மென்பதற்கு வருமாறு. அந்நூலின்,

சீவன்முத்தி பரமுத்தி சிவமாமுத்தி சொரூபத்...
தோவுமுத்தி மேலான சொரூபநான்கோ டுறுமுத்தி
நீதிமுத் திரையின்முத்தி நீடானந்த முத்தியுடன்
ஞேதுமுத்தி யொருபதுமே வேதாந்தத்தா லுறுமுத்தி.

என்னவுற்றுணர்ந்த மைந்தா விதுமறை யந்தமென்ன
வொன்றிட வுரைத்தலாலே உணர்ந்துநின் றுறவேநிட்டை
நின்றுறப் புரியுங்காலே நின்செயலொழிய மாற்றி
யொன்றிரு வினையை வீட்டியருளினாலுரைத்தல்வேண்டும்.

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. இனித் திருமந்திரத் திலும்,

அறிவு பரஞ்சிவ மானந்தச் சோதி
பிறிவில் சொருபங்கள் பேரியல் மூன்றும்
நெறிதரு முத்திராந்த......நின்றடங்கச்
... ... சிவசித்தார ... ...

ஞானமு ஞேயமும் ஞாதுருவுங் கெடத்
தானு மெனது முறையு நற்றூரம்
மேனையு மேன் முத்திரையு மிறந்திட
மோன்மொழி கொடு முத்தி தந்தானே.

தூலப் பிரணவஞ் சொரூபானந்தப் பேருரை
பாலித்த சூக்கும மேலைச் சொரூபப்பெண்
ஆலித்த முத்திரை யாங்கதிற் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே. 2675

இவ்வாறு கூறும் பஞ்சப் பிரணவங்களாற் பத்து முத்தி யன்றி,

துரிய மீராறுஞ் சொரூப முடனாகிப்
பெரிய திருநட்டம் பேசும் பிரணவத்
துரியத் துரியமொரு மூன்று சென்றற்
றரிய பரா னந்தி...தானே.

எனவும்,

குற்றமில் மூவைந் துரியமங் குணர்ந்
தற்றவர் மேலாந் துரியத்து வைத்தற்ற
நற்பரவா னந்தமாந தியெ...
உற்றுணர் சித்தி முத்திக ளுதையமே.

எனவும்,

தானய வீரெண்டுரிஞ் சமைந்தற்ற
மோனனு பூதி முடிவான வானந்த
தேனாரமுதுண்டு சீநந்தி பாதத்தே
தானுமுள மற்றுச் சாந்தமுஞ் சார்ந்ததே.

எனவும் கூறும் பன்னிரு துரியம் பதினைந்து துரியம் பதினாறு துரியமுமாகக்கூறும் பேதங்களும் கண்டுகொள்க. இவற்றுட் பதினாறு துரியமாவன:— தூலப் பிரணவ துரியம் நாலு, சூக்குமப் பிரணவதுரியம் நாலு, அதிசூக்குமப் பிரணவ துரியம்மூன்று, மகாசூக்குமப் பிரணவதுரியம் நாலு, குருபத துரியம் ஒன்று ஆகப் பதினாறு துரியமென்பர். இவற்றுள் தூலப்பிரணவதுரியம் நாலாவன:— சீவன்முத்தி பரமுத்தி சிவமுத்தி சொரூபமுத்தியென்னும் நான்கு. சூக்குமப் பிரணவதுரியம் நாலாவன:— சுவசொரூபத்துரியம் சூக்கும

சுவரூபத்துரியம் அதிசூக்கும சுவரூபத்துரியம், மகாசூக்கும சுவரூபத்துரியம் என்னும் நான்கு. அதிசூக்குமப் பிரணவத் துரியம் மூன்றாவன:— முத்திராதுரியம் மூத்திராந்த துரியம் நடனதுரியம் என்னும் மூன்று. மகா சூக்குமப் பிரணவ துரியம் நாலாவன:– தூலதாரக பிர்ம்மதுரியம், சூக்குமதாரக பிரம்மதுரியம், அதிசூக்குமதாரக பிரம்ம துரியம், மகா சூக்கும தாரக பிரம்ம துரியம், என்னும் நான்கு. குருபத துரியம் ஒன்று, ஆகப் பதினாறு துரியமுங் கண்டுகொள்க. இவற்றுள் ஒன்று குறையப் பதினைந்து. மூன்று குறையப் பன்னிரண்டுமாமாறு காண்க. இவ்வனைத்தும் பஞ்சப் பிரணவபேதமென்க. இவற்றின் மேன் மூன்று கூட்டி அஷ்டப் பிரணவமென்றும், அவற்றோடெட்டுக் கூட்டி சோடசப் பிரணவவமன்றும் விரிப்பாருமுளர். அவற்றுள்ளு முன்னுரைத்த 'வுன்ன லெழுப்பல் ஒடுக்கமென்னும் நனவு கனவு சுழுத்தியும்' சுவரூபமாயே முடிதலின் விரித்தும் விசேட மின்றாதலினீண்டு காட்டிற்றிலம். அவற்றை தத்துவரத்ன கரம் முதலானவற்றிற் கண்டுகொள்க. சித்தாந்தத்திற் றெச காரியம் கூறிப் பின் பலவாக விரித்தாற்போல ஈண்டு முன்னர்த் தெசாவத்தை கூறிப் பின் சூக்குமாதி பிரணவ பேதத்தாற் பலபடவிரித்ததென்க.

शुद्धशैवं तथामुख्यं चतुष्पादं प्रणवान्तकम् ।

எனச் சுத்த சைவம் பிரணவ முடிவாயிருக்குமாற்றாலவ்வாறு பிரணவபேதமாய் விரித்ததென்க. அவற்றுள்ளும் தூலப் பிரணவ பேதமான தெசாவத்தை யீண்டுப் பிரசித்த மென்பது,

तत्सर्वं वेदरूपकम् ।
तदन्तं परजीवात्मा द्वयोरैक्यं परात्परम् ॥
शुद्धशैवं स्वसंवेद्यं शुद्धसन्मार्गरूपकम् ।
तत्संप्रदाय सिद्ध्यर्थं......स्था विले यक......

என ஞானசித்தியிற் கூறுதலின். இவ்வாறு தசாவத்தை கட்குந் தத்துவராய சம்பிரதாயிகள் ஞானவாசிட்டத்திற் கூறியதூஉமாமென்பர், அது வருமாறு.